ANNA INSTITUTE OF MANAGEMENT

EXCELLENCE BY MANAGEMENT

மகத்தான மனித வளம்;
அதன்மூலம் மக்கள் நலம்



# வரைவுகள் கையேடு

**அண்ணா மேலாண்மை நிலையம்**

**சென்னை - 600 028**

Scanned with CamScanner

**D. ஜெயக்குமார்**
மீன்வளம், பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.
நாள்: [illegible].2015

## வாழ்த்துரை

அண்ணா மேலாண்மை நிலையம் அரசின் தலைமைப் பயிற்சி நிலையம். அனைத்து நிலை அலுவலர்களுக்கும் நிர்வாகத்தின் பல்வேறு நேர்வுகளில் பயிற்சி அளித்து அவர்களைத் திறன் வாய்ந்தவர்களாக மேம்படுத்துகிற அரிய பணியை இது ஆற்றி வருகிறது. அலுவலர்களின் தேவைக்கேற்ப புதுப்புது பயிற்சிகளை அளிப்பதோடு தலைமைப் பண்புகள், மேலாண் திறன், மன அழுத்த மேலாண்மை போன்றவற்றிலும் தக்காரைக் கொண்டு வகுப்புகள் நடத்தி அனைத்துப் பரிமாணங்களிலும் அவர்களை ஒளிர வைக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசு ஆண்டுதோறும் புதிய பணியாளர்களை நியமித்து வருகிறது. அவர்களுக்கு கோப்புகளைக் கையாளும்போது எவ்வாறு வரைவுகளைத் தயாரிக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டும் வகையில் முக்கியமான கடிதப்போக்குவரத்திற்குரிய மாதிரி வரைவுகளை இந்நிலையம் தயாரித்துள்ளது. இந்தக் கையேட்டைக் கையில் வைத்திருந்தால் தேவைக்கு ஏற்ப கடிதங்களைத் தயாரித்து, உயர் அலுவலரின் ஒப்பத்தைப் பெற்று உடனடியாக அனுப்ப முடியும். இதன் மூலம் நேர விரயம் தவிர்க்கப்படுவதோடு நிர்வாகம் முயல் வேகத்தில் முந்தியடித்துக்கொண்டு செல்லும். இந்த வரைவுக் கையேட்டை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்று என்னுடைய கோரிக்கையையும், இதை நுணுக்கமாகத் தயாரித்துள்ள அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு என்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

D. ஜெயக்குமார் 14/9/15

(D. ஜெயக்குமார்)

Scanned with CamScanner

**வெ.இறையன்பு**
கூடுதல் தலைமைச் செயலாளர்/இயக்குநர்
அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும்
பயிற்சித் துறைத் தலைவர்.

**அண்ணா மேலாண்மை நிலையம்**
163/1, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600028.

## [illegible]

படிப்பு வேறு, பணி வேறு. படிப்பு அறிவை வளர்க்கிறது, பணியோ அனுபவத்தினால் அமைகிறது. தமிழகத்தில் அரசுப் பணிகளுக்கு அதிகத் தகுதி உள்ளவர்கள் நுழைகிறார்கள். இருந்தாலும் அலுவலக நடைமுறை என்பது ஒரே நாளில் விளைந்து விடுவது அல்ல. அது அனுபவத்தின் காரணமாக ஏற்படுகிற முதிர்ச்சியின் திரட்சி. புதிதாகப் பணியில் சேர்ந்தவர்களுக்கு கோப்புகளைக் கையாளும்போது கண்களைக் கட்டி காட்டில் விட்டதைப் போன்ற உணர்வு ஏற்படுவது இயல்பு. பல நேரங்களில் பக்கத்து இருக்கையில் இருப்பவரை நச்சரித்தும், பழைய கோப்புகளில் இருப்பவற்றையே உச்சரித்தும் வரைவுகளைத் தயாரித்து மேலதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். ஒவ்வொரு நிலையிலும் திருத்தங்கள் செய்யப்பட்டு இறுதி வடிவத்தை அடையும்போது தயாரித்தவருக்குத் தன் மீது இருக்கும் நம்பிக்கையே தளர்ந்து விடுகிற வாய்ப்புகள் உண்டு. இவை காலதாமதத்தை ஏற்படுத்துவதோடு மேசையின் மீது சேர்கிற கோப்புகளின் எண்ணிக்கையையும் கணிசமாக அதிகரித்து விடுகிறது. இதனால் நிர்வாகத்திற்கு ஆங்காங்கே வேகத்தடைகள் விளைந்து விடுகின்றன.

வரைவுகளை எப்படித் தயாரிக்க வேண்டும், எந்த நேர்வில் எப்படிப்பட்ட வரைவு தேவை போன்ற விவரங்கள் பணியாளர்கள் முன் வைக்கப்பட்டால் அவர்கள் உடனடியாக தேவைக்கு ஏற்ப வரைவுகளைத் தயாரித்து திருத்தங்கள் இல்லாமல் ஆணைகளையும், கடிதங்களையும் வெளியிட முடியும். இது நேரச் சிக்கனத்திற்கு வழி வகுப்பதோடு, முக்கியமான கோப்புகளில் ஆழ்ந்து சிந்தித்து வரைவுகளை வைக்கவும் உதவியாக இருக்கும். இரண்டொரு முறை வரைவுகளை மேற்பார்வை செய்து விட்டால் சொந்தமாகத் தயாரிக்கும் திறனையும் பெற்று விடுவார்கள். பணி உற்சாகத்தின் ஊற்றுக்கண்ணாக ஆகிவிடும்.



Scanned with CamScanner

அண்ணா மேலாண்மை நிலையம் நிர்வாகத்தை எளிமைப்படுத்தும் வகையில் பயிற்சிகளை அளிப்பதோடு தேவையான கையேடுகளைத் தயாரிப்பதிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்து கையேடு வெளியிட்டதைப்போலவே வரைவுகளைத் தயாரிப்பதற்கும் மாதிரி வரைவுகளை நுட்பமாகத் தயாரித்து அவற்றைத் தொகுத்து வரைவுக் கையேடு ஒன்றை நிபுணர்கள் முயற்சி[illegible]ாண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

இந்த நல்ல முயற்சியை முன்[illegible] நடத்தி, இந்தக் கையேட்டிற்கு இறுதி வடிவம் தந்த [illegible]ணை இயக்குநர் திரு.ச.இராஜேந்திரன் அவர்களையும் இதற்காக பாடுபட்ட [illegible] ஆர்.யுகேந்திரன், துணை ஆட்சியர் / ஆட்சி அலுவலர், அண்ணா மேலாண்மை நிலையம் திரு.மு.பாலசுப்பிரமணி, துணை இயக்குநர் (நிர்வாகம்) வேளாண்மை இயக்குநரகம், திரு. மா.மதனசாமி, துணை ஆட்சியர் (ஓய்வு) மற்றும் திரு.சீ.ஜெயராமன், ஆட்சி அலுவலர் (ஓய்வு) வேளாண்மைத்துறை ஆகியோர் களையும் பாராட்டுகிறேன்.

எதுவும் முழுமையானதல்ல. இந்தக் கையேடும் எல்லா வகையிலும் முழுமையானது என்று கூற முடியாது. இது ஒரு தொடக்கம். அலுவலர்களின் ஆலோசனைகளுக்கேற்ப வேண்டிய மாதிரி வடிவங்கள் இணைக்கப்பட்டு தொடர்ந்து மேம்படுத்தப்படும்.

இதனைப் பயன்படுத்தும் பணியாளர்கள் நாளடைவில் மற்றவர்களுக்கு வழிகாட்டும் அளவிற்கு திறனும், ஆற்றலும் பெற்று அரசுப் பணியை எளிய மக்களுக்கு இனிய செயல்கள் செய்யும் சேவையாக மாற்ற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்.

வெ.இறையன்பு
கூடுதல் தலைமைச் செயலாளர் / இயக்குநர்
அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும்
பயிற்சி துறைத் தலைவர்



Scanned with CamScanner

# I. அலுவலக நடைமுறை வரைவுகளின் வகைகள்



Scanned with CamScanner

# முகவுரை

அலுவலக நடைமுறையில் வரைவுகள் பிரதானமானதாகும். அரசு அலுவலர்கள் வரைவு எழுதுதலில் முத்திரையினை பதிக்கும் சமயம் அலுவலகப் பணி செம்மையாகவும், விரைவாகவும் மேற்கொள்ள ஏதுவாக அமையும். வரைவு எழுதுதலை நுணுக்கமாக அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும்.

அரசு அலுவலர்கள் அநேக இனங்களில் கோப்பில் உள்ள ஆவணங்கள் அல்லது வெளியிலிருந்து பெறப்படும் கடிதம் மற்றும் இதர வகையான ஆவணங்களின் அடிப்படையில் வரைவுகள் தயார் செய்வது சிற்சில இனங்களில் மட்டும் அலுவலர்கள் எவ்வித ஆவணமுமின்றி, தன்னிச்சையாக வரைவுகளை தயார் செய்யும் சூழல் ஏற்படும். அவ்வாறான இனங்களில், அதுபோன்று முன்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாக முடிவுற்ற கோப்புகளை பார்வையிட்டு வரைவுகளை தயார் செய்யலாம்.

வரைவுகள் எழுதுதல் என்பது, இளநிலை உதவியாளர் / உதவியாளர், கண்காணிப்பாளர் மற்றும் அலுவலகத் தலைவர் உள்ளிட்ட இதர அலுவலர்கள் ஆகியோர்களது ஒட்டுமொத்த கூட்டு பொறுப்பாகும். எனவே, இளநிலை உதவியாளர் / உதவியாளர் வரைவுகளின் வகைகள் அறிந்து கொள்வதுடன் அவைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை நன்கு அறிந்திருத்தல் அவசியமானதாகும். அலுவலகத்திலிருந்து வெளியில் அனுப்பப்படும் வரைவுகளைக் கொண்டு ஒட்டு மொத்த அலுவலகத்திறனை மதிப்பீடு செய்ய இயலும். எனவே, அலுவலர்கள் வரைவுகளின் வகைகள், அவைகளின் அமைப்பு, நடை ஆகியவற்றுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மிகவும் எளியவகையிலும், தேவையான கருத்துக்களை மட்டும் தெரிவிக்கக்கூடியதாகவும், எழுத்து மற்றும் இலக்கணப் பிழையின்றியும் இருத்தல் இன்றியமையாததாகும்.

வரைவுகள் எழுதுதலில் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் முந்தைய கோப்புகள், முடிவுற்ற கோப்புகள் ஆகியவவைகளை பார்வையிட்டும், வரைவுகளை குறிப்பிட்ட வடிவத்திலும் தெளிவாகவும், எளிய நடை மற்றும் பிழையின்றியும் எழுதக்கூடிய திறன்கொண்டவர்களாக திகழ்வார்கள்.



Scanned with CamScanner

## வரைவுகளின் வகைகள்


| | | |
|---|---|---|
| 1. | மேலொப்பம் (Endorsement) | 13 |
| 2. | அசல் திருப்ப முடிவு / அசல் திருப்ப கடிதம் | 14 |
| 3. | அறிவிப்பு | 15 |
| 4. | சுற்றறிக்கை | 16 |
| 5. | அழைப்பாணை | 17 |
| 6. | சான்று | 18 |
| 7. | குறிப்பு / அலுவல்–சாரா குறிப்பு | 19 |
| 8. | குறிப்பாணை / விளக்கம் கேட்கும் குறிப்பாணை/ குற்றச்சாட்டுகள் குறிப்பாணை | 20 |
| 9. | கடிதம் | 28 |
| 10. | நேர்முகக் கடிதம் | 33 |
| 11. | செயல்முறைகள் | 38 |
| 12. | அலுவலக ஆணை | 39 |
| 13. | கூட்டக் குறிப்புகள் | 41 |
| 14. | ஆய்வுரை | 43 |


## பணி நடைமுறை செயல்முறை மாதிரிகள் மற்றும் மாதிரி விண்ணப்பங்கள்


| | | |
|---|---|---|
| 1. | பணிவரன்முறை செய்தல் | 47 |
| 2. | தகுதிகாண் பருவம் / முடித்த / நீட்டித்த ஆணை | 48 |
| 3. | முழு / நடப்பு கூடுதல் பொறுப்பு | 51 |
| 4. | தற்செயல் விடுப்பல்லாத பிற விடுப்புக்கான விண்ணப் படிவம் | 53 |
| 5 | ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு – அலுவலகக் குறிப்பு | 54 |
| 6. | சிறப்பு தற்செயல் விடுப்பு ஒப்பளிப்பு | 55 |
| 7. | பண்டிகை முன்பண ஒப்பளிப்பு ஆணை | 56 |
| 8. | கைத்தறி / கதர் முன்பணம் – ஒப்பளிப்பு ஆணை | 57 |
| 9. | பொது வருங்கால வைப்புநிதி முன்பண விண்ணப்பம்<br>பொது வருங்கால வைப்புநிதி தற்காலிக முன்பணம்<br>பொது வருங்கால வைப்புநிதி தற்காலிக முன்பணம்–ஒப்பளிப்பு ஆணை<br>பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம் | 59 |
| 10. | பணி ஓய்வு | 71 |
| 11. | ஓய்வுக்கு பின்னர் ஈட்டிய விடுப்பு ஒப்பளித்துப் பணம் பெறல் | 72 |


தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005


**மாதிரி வரைவுகள்** 75




Scanned with CamScanner

# 1. மேலொப்பம்

அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பிற அலுவலகங்களிலிருந்து வரப்பெறும் தாக்கீது, குறிப்பாணை, செயல்முறைகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அளிக்க பெறப்பட்ட ஆவணத்தின் மீது மேற்கொள்ளப்படும் பதிவு மேலொப்பமாகும்.

மே.எண் : அ1/ /2019

...................... அலுவலகம்,
சென்னை

நாள்: / /2019

//அனுப்பப்படுகிறது//

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
திரு. / திருமதி

(வகிக்கும் பதவி விவரம்)



Scanned with CamScanner

## 2(1) அசல் திருப்ப முடிவு

குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கடிதம், செயல்முறைகள் முதலியன, மாறாக பிரிதொரு அலுவலகத்தில் பெறப்படும் சூழலில், பெறப்பட்டவையினை அக்குறிப்பிட்ட சரியான அலுவலகத்திற்கு அனுப்புவதே அசல் திருப்ப முடிவாகும்.

அ.தி.மு.எண் : அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை

நாள்: / /2019

தவறுதலாக பெறப்பட்டது. அனுப்பப்படுகிறது

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
(குறிப்பிட்ட அலுவலக முகவரி)

## 2(2) அசல் திருப்ப கடிதம்

குறிப்பிட்ட கடிதம் தொடர்பாக, சார்நிலை அலுவலர் / அலுவலகத்திலிருந்து பிரேரணை கோரி சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர் / அலுவலகத்திற்கு அக்கடிதத்தினை அனுப்பி வைத்து, பிரேரணையுடன் அனுப்பப்பட்ட கடிதத்தினையும் அனுப்ப கோருவது அசல் திருப்ப கடிதமாகும்.

அ.தி.க.எண்.: அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

அனுப்பப்படுகிறது. இக்கடிதம் தொடர்பாக உரிய கருத்துரு/ பிரேரணையினை .................................. தினங்களுக்குள் அசல் கடிதத்துடன் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
(குறிப்பிட்ட அலுவலக முகவரி / விவரம்)



Scanned with CamScanner

# 3 அறிவிப்பு

அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குறிப்பிட்ட தகவலினை தெரிவிக்க பயன்படுத்தும் முறையாகும். இவ்வறிவிப்பினை அலுவலக தகவல் பலகையில் பிரசுரித்தால் போதுமானதாகும்.

அ1/ /2019

................... அலுவலகம்,
சென்னை

நாள்: / /2019

அறிவிப்பு

பொருள் :
பார்வை :

****

(அறிவிப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய தகவல் குறித்த விவரம்)

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

அனைத்து அலுவலர்களது
பார்வைக்காக – தகவல் பலகைக்கு



Scanned with CamScanner

# 4 சுற்றறிக்கை

அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குறிப்பிட்ட தகவலினை தெரிவித்து அத்தகவலின்படி நடந்து கொள்ள அறிவுறுத்தல் ஆகும். இச்சுற்றறிக்கையினை அலுவலர்களது சுற்றுக்கு விடப்பட்டு அலுவலர்களது ஒப்புகையினை பெறுதல் வேண்டும்.

அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

**சுற்றறிக்கை**

பொருள் :
பார்வை :

****

(அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய விவரங்கள் மற்றும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த தகவல்கள்)

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்

அனைத்து / குறிப்பிட்ட அலுவலர்களுக்கு



Scanned with CamScanner

## 5 அழைப்பாணை

அலுவலகத் தலைவர் அல்லது விசாரணை அலுவலர் மேற்கொள்ளப்பட உள்ள விசாரணை தொடர்பாக, எந்த நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவருக்கு விசாரணை மேற்கொள்ளப்பட உள்ள இடம், நாள் மற்றும் நேரம் ஆகியவைகளைக் குறிப்பிட்டு அனுப்பப்படும் தாக்கீதாகும்.

அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

பொருள் :
பார்வை :

****

பார்வை....................–இல் காணும் கடிதத்தினை / செயல்முறைகளைத் தொடர்ந்து, இப்பொருள் குறித்து தங்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், தாங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலகத் தலைவர் / விசாரணை அலுவலர் முன்பாக ......................... (....................கிழமை), பிற்பகல்________மணியளவில் நேரில் ஆஜராக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர் / அலுவலர்,
முகவரி (தனி நபர் எனில் பதிவஞ்சல் வாயிலாக)
(அலுவலர் எனில் பணிபுரியும் அலுவலகம் வாயிலாக சார்வு செய்ய கேட்டுக் கொண்டு அனுப்புதல் வேண்டும்)

நகல்: குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் (பணிபுரிந்துவரும்.................................... அலுவலகம் வாயிலாக)

# 6 சான்று

அலுவலகம் வாயிலாக அலுவலர் அல்லது பொதுமக்களுக்கு சான்றாக கோரும் விவரங்களுக்கு அளிக்கப்படுவதாகும்.

அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

பொருள் :
பார்வை :

****

(பார்வையில் காணும் விண்ணப்பம் / கடிதத்தின் மேல் உரிய விசாரணைக்கு பின்னர் அளிக்கப்படும் சான்று பின்வருமாறு ஆகும்.)

1.
2.

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
குறிப்பிட்ட அலுவலர்களுக்கு / நபருக்கு.



Scanned with CamScanner

## 7(1) குறிப்பு

அலுவலகத் தலைவர் / சார்நிலை அலுவலர், சார்நிலை பணியாளர்களுக்கு அல்லது கண்காணிப்பாளர்களுக்கு, குறிப்பிட்ட தகவலினை தெரிவிக்க பயன்படுத்தும் முறையாகும்.

அ1/ /2019

.................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

சார்நிலை அலுவலர் / கண்காணிப்பாளருக்கு குறிப்பு

பொருள் :
பார்வை :

****

(குறிப்பிட்ட சார்நிலை அலுவலர் / கண்காணிப்பாளர் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி குறித்த சுருக்கம்)

அலுவலகத் தலைவர் / சார்நிலை அலுவலர்

## 7(2). அலுவல்–சாரா குறிப்பு

சார்நிலை அலுவலர்களுக்கிடையே மேற்கொள்ளப்படும் கடித பரிமாற்றமாகும்.

அ1/ /2019 நாள்: / /2019

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது நேர்முக உதவியாளர் (கணக்கு) அவர்களுக்கு அலுவல்–சாரா குறிப்பு

****

அய்யா / அம்மையீர்,

பொருள் :
பார்வை :

****

(விவர சுருக்கம்)

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்(பொது)



Scanned with CamScanner

## 8(1) குறிப்பாணை

> அலுவலகத்தில் பணிபுரியும் / பணிபுரிந்த அலுவலருக்கு குறிப்பாணை வினைத்திறனை தெரிவித்து, நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி அனுப்பப்படுகிறது.

ந.க/ /2019

............ அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

### குறிப்பாணை

பொருள் :
பார்வை :

****

(அலுவலர் மேற்கொள்ளப்பட வேண்டிய/ மேற்கொள்ள தவறிய பணிகள் குறித்த விவரத்தினை குறிப்பிட்டு, அப்பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள அறிவுறுத்துதல் ஆகும்)

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
குறிப்பிட்ட அலுவலரது பெயர் பதவி } பிறிதொரு அலுவலகத்தில் பணிபுரிந்து வருபவரெனில் பணிபுரிந்து வரும் அலுவலகத் தலைவர் வாயிலாக சார்வு செய்ய வேண்டும்



Scanned with CamScanner

## 8(1) குறிப்பாணை

அலுவலகத்தில் பணிபுரியும் / பணிபுரிந்த அலுவலருக்கு குறிப்பான விவரத்தினை தெரிவித்து, நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி அளிக்கப்படுவதாகும்.

ஆ2/ /2019

........................ அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

**குறிப்பாணை**

பொருள் :
பார்வை :

****

(அலுவலர் மேற்கொள்ளப்பட வேண்டிய/ மேற்கொள்ள தவறிய பணிகள் குறித்த விவரத்தினை குறிப்பிட்டு, அப்பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள அறிவுறுத்துதல் ஆகும்)

அலுவலகத் தலைவர் /
அலுவலகத் தலைவருக்காக

பெறுநர்
குறிப்பிட்ட அலுவலரது பெயர் பதவி } பிரிதொரு அலுவலகத்தில் பணிபுரிந்து வருபவரெனில் பணிபுரிந்து வரும் அலுவலகத் தலைவர் வாயிலாக சார்வு செய்ய வேண்டும்



Scanned with CamScanner

## 8(2) காரணம்/விளக்கம் கேட்கும் குறிப்பாணை

அலுவலகத்தில் பணிபுரியும்/பணிபுரிந்த அலுவலர் மேற்கொள்ள தவறிய பணிகள் அல்லது தவறாக மேற்கொண்ட பணிகள் குறித்து தெரிவித்து, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955–இன் பிரிவு 17(a)–இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்ததாகும்.

ஆ3/ /2019

...................... அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

### காரணம் / விளக்கம் கேட்கும் குறிப்பாணை

பொருள் : பொதுப் பணிகள் ........................... அலுவலகம், சென்னை – (திரு/திருமதி) .................................... (வகிக்கும்/வகித்த பதவி) – பணியில் காணப்பட்ட குறைபாடுகள்– தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955, பிரிவு 17(a)–இன் கீழ் நடவடிக்கை – மேற்கொள்ள உத்தேசித்தல் – விளக்கம் கேட்டல்.

பார்வை :

****

இவ்வலுவலகத்தில் ...................................ஆக, ....................................... முதல் .................................... வரை பணியாற்றிய திரு/திருமதி. ...................................... என்பவரது பணியில் கீழ்காணும் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

குறைபாடு : 1
குறைபாடு : 2

2. எனவே, மேற்படி அலுவலர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955, பிரிவு 17(a)–இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

3. மேற்படி அலுவலர், இந்த உத்தேச நடவடிக்கை தொடர்பாக மேலே சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகள் குறித்த எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை, இக்காரணம் / இவ்விளக்கம் கேட்கும் குறிப்பாணை கிடைக்கப் பெற்ற பதினைந்து தினங்களுக்குள்* அளிக்க அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், அலுவலரிடமிருந்து எழுத்துப் பூர்வ விளக்கம் பெறப்படவில்லையெனில், அலுவலர் கூறுவதற்கு ஏதுமில்லை யெனக் கருதி, இருப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. இக்காரணம் / இவ்விளக்கம் கேட்கும் குறிப்பாணை கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புகையை உடன் அளிக்க சம்பந்தப்பட்ட அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

அலுவலகத் தலைவர் /
நியமன அலுவலர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர் – பணிபுரியும் அலுவலகம் வாயிலாக.

நகல் : அலுவலர் பணிபுரிந்து வரும் அலுவலகம் – இரட்டை பிரதிகள்

இக்காரணம் / இவ்விளக்கம் கேட்கும் குறிப்பாணையினை சம்பந்தப்பட்ட அலுவலர் வசம் சார்பு செய்து, சார்பு செய்தமைக்கு இவ்வலுவலகத்திற்கு அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது / கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*அலுவலர் ஓய்வு பெறவுள்ள நாளினைக் கணக்கில் கொண்டு குறிப்பிட்ட நாளினை குறைத்தும் குறிப்பிடலாம்.



Scanned with CamScanner

## 8(3) குற்றச்சாட்டுகள் குறிப்பாணை

அலுவலகத்தில் பணிபுரியும் / பணிபுரிந்த அலுவலர் மேற்கொள்ள தவறிய பணிகள் அல்லது தவறாக மேற்கொண்ட பணிகளினால் அரசுக்கு அவப்பெயர், வருவாய் இழப்பு மற்றும் அலுவலரது ஒழுங்கீன நடவடிக்கைகள் ஆகியவைகள் தொடர்பாக, அவ்வலுவலருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டிய நேர்வுகளில், தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955–இன் பிரிவு 17(b)–இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை காரணமாக அளிக்கப்படும் குறிப்பாணையாகும்.

ஆ4/ /2019

........................அலுவலகம்,
சென்னை
நாள்: / /2019

**குற்றச்சாட்டுகள் குறிப்பாணை**

பொருள் : பொதுப்பணிகள் ........................................................ அலுவலகம், சென்னை – (திரு / திருமதி) .................. (வகிக்கும்/வகித்த பதவி) – பணியில் காணப்பட்ட / பணி மேற்கொள்ளாததால் நிகழ்ந்த கடுமையான பாதிப்பு / அரசுக்கு இழப்பு / வருவாய் இழப்பு முதலியன – தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955, பிரிவு 17(b)–இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்தல் –எழுத்துப்பூர்வ விளக்கம் கேட்டல்.

பார்வை:

****

இக்குற்றச்சாட்டுகள் குறிப்பாணையினை கையொப்பமிட்டுள்ள அலுவலர், இவ்வலுவலகத்தில் ............................... ஆக, ........................... முதல்........................... வரை பணியாற்றிய திரு/திருமதி என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)–இன் கீழ் விசாரணை மேற்கொள்ள உத்தேசித்துள்ளார். அலுவலரது தவறான நடத்தை மற்றும் தவறான செயல் தொடர்பான குற்றச்சாட்டுகளின் அறிக்கை குறித்து



Scanned with CamScanner

மேற்கொள்ளப்பட உள்ள விசாரணைக்கான விவரங்கள் பிற்சேர்க்கை I–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அலுவலரது தவறான நடத்தை மற்றும் தவறான செயல் குறித்த குற்றச்சாட்டுகள், தனித்தனியே பிற்சேர்க்கை II–இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆவணங்கள் அடங்கிய பட்டியல், பிற்சேர்க்கை III-லும், சாட்சிகள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை IV-லும் தொவிக்கப்பட்டுள்ளன.

2. மேற்படி அலுவலர் இக்குற்ற குறிப்பாணையினை பெற்றுக் கொண்ட இருபத்தோரு நாட்களுக்குள், சாட்டுரைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் சார்பான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை அளிக்க அறிவுறுத்தப்படுகிறார். மேலும், குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை அல்லது அவ்வலுவலர் முன்பாக நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமா அல்லது மேற்குறிப்பிடப்பட்ட இரண்டும் தேவையா என்பதையும் தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், அலுவலரிடமிருந்து கோரிய எழுத்துப்பூர்வ விளக்கம் பெறப்படவில்லையெனில், அலுவலர் கூறுவதற்கு ஏதுமில்லையெனக் கருதி, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

3. அரசு அலுவலரால் மறுக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மட்டுமே வாய்மொழி விசாரணை மற்றும் வாய்மொழி சாட்சியம் பெறப்படும் என்பதை அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது. எனவே, அலுவலர் ஒவ்வொரு குற்றச்சாட்டினையும் மறுக்கவோ அல்லது ஏற்கவோ செய்தல் வேண்டும்.

4. அலுவலர் பத்தி 2–இல் குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள், எழுத்துப் பூர்வமான விளக்கத்தினை அளிக்கத் தவறினாலோ அல்லது விசாரணை அலுவலர் முன்பாக நேரில் ஆஜராகாமல் இருந்தாலோ அல்லது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுக்கம் மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)இன் கீழான ஷரத்துக்களை பின்பற்ற தவறினாலோ அல்லது மேற்படி விதியின் கீழ் அளிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவுறுத்தலின்படி செயல்பட தவறினாலோ, விசாரணை அலுவலர் குற்றம்சாட்டப்பட்ட அலுவலர் தொடர்பாக ஒருதலைபட்ச விசாரணையினை மேற்கொள்ளலாம்.

5. தமிழ்நாடு அரசு அலுவலர்கள் நடத்தை விதிகள், 1973–இன் விதி 18–இன் மீது அலுவலர் கவனம் வேண்டப்படுகிறது. மேற்படி விதிகளின்படி எந்தவொரு அரசு அலுவலரும் அவரது பணி சார்பாக அரசியல் கட்சி அல்லது உயர்அலுவலரது செல்வாக்கினை கொண்டுவர முயற்சிக்கக் கூடாது. இக்குற்றச்சாட்டுகள் குறிப்பாணை தொடர்பாக அலுவலர் சார்பாக எந்தவொரு நபரிடமிருந்தும் முறையீடு ஏதும் வரப்பெறின், அவ்விவரம் குற்றச்சாட்டப்பட்ட அலுவலருக்கு தெரிந்தே மேற்படி முறையீடு அளித்துள்ளார் என்றும், அலுவலரால் மேற்படி முறையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்,



Scanned with CamScanner

அதற்கான நடவடிக்கை அலுவலர் மீது தமிழ்நாடு அரசு அலுவலர்கள் நடத்தை விதிகள், 1973, விதி 18–னை மீறியமைக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. இக்குற்றச்சாட்டுகள் குறிப்பாணையினை மற்றும் வினா படிவம் ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகையினை உடன் அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு :

பிற்சேர்க்கைகள்

மற்றும் வினா படிவம்

அலுவலகத் தலைவர் /

நியமன அலுவலர்

பெறுநர்

சம்பந்தப்பட்ட அலுவலர் – பணிபுரியும் அலுவலகம் வாயிலாக.

நகல் : அலுவலர் பணிபுரிந்து வரும் அலுவலகம் –

– இரட்டை பிரதிகள்

இக்குற்றச்சாட்டுகள் குறிப்பாணையினை சம்பந்தப்பட்ட அலுவலர் வசம் சார்பு செய்து, சார்பு செய்தமைக்கு ஒப்புகை பெறப்பட்ட நகலினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது / கேட்டுக் கொள்ளப்படுகிறது.



Scanned with CamScanner

## பிற்சேர்க்கை–I

திரு/திருமதி ...................................., .................................. (பதவி), என்பவருக்கு எதிராக சாட்டுரைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பான அறிக்கை.

**********

**குற்றச்சாட்டு–1**

மேற்காணும் காலத்தில், மேற்படி அலுவலகத்தில் .................................. பதவியில் பணிபுரிந்த போது திருு/திருமதி ........................................

**குற்றச்சாட்டு–2**

மேற்காணும் காலத்தில், மேற்படி அலுவலகத்தில் .................................. பதவியில் பணிபுரிந்த போது திரு/திருமதி ........................................

**குற்றச்சாட்டு–3**

மேற்காணும் காலத்தில், மேற்படி அலுவலகத்தில் .................................. பதவியில் பணிபுரிந்த போது திரு/திருமதி ........................................

முதலியன

அலுவலகத் தலைவர் /
நியமன அலுவலர்

## பிற்சேர்க்கை–II

திரு/திருமதி ......................................, ........................................ பதவி என்பவரது தவறான நடத்தை மற்றும் தவறான செயல் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த அறிக்கை.

******

குற்றச்சாட்டு – 1
குற்றச்சாட்டு – 2
குற்றச்சாட்டு – 3

முதலியன

அலுவலகத் தலைவர் /
நியமன அலுவலர்



Scanned with CamScanner

## பிற்சேர்க்கை-III

திரு/திருமதி ......................................., .................................... பதவி வகித்தவர் / பதவியில் உள்ளவர் மீது சாட்டுரைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முன்மொழியப்பட்ட ஆவணங்கள்

1.
2.
3. .....முதலியன

அலுவலகத் தலைவர் /
நியமன அலுவலர்

## பிற்சேர்க்கை-IV

திரு/திருமதி ......................................, ..................................... பதவி வகித்தவர் / பதவியில் உள்ளவர் மீது சாட்டுரைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சிகள்

1.
2.
3. .....முதலியன

அலுவலகத் தலைவர் /
நியமன அலுவலர்



Scanned with CamScanner

# 9 கடிதம்

ஒரு அலுவலகத்திலிருந்து, மற்றொரு அலுவலகத்திற்கு சாதாரண நிலையில் அனுப்பப்படுவதாகும்.

சார்நிலை அலுவலகத்தின் தலைவர், அவருக்கு உயர்நிலையில் உள்ள அலுவலருக்கு எழுதப்படுவது, உயர்நிலையில் உள்ள அலுவலர், சார்நிலை அலுவலருக்கு எழுதப்படுவது மற்றும் சமநிலையில் உள்ள அலுவலர்களுக்கு இடையே எழுதப்படுவது என மூன்று வகைகள் கொண்டதாகும்.

கடிதத்தில் கடிதம் அனுப்புவரே கையொப்பமிடும் பட்சத்தில் அனுப்புநர் எனும் பகுதியில், அனுப்புநரது பெயர், திரு / திருமதி / மருத்துவர் / முனைவர் எனும் விவரத்துடன், கல்வி விவரங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.

கடிதத்தில் கையொப்பமிடும் அலுவலர் அலுவலகத் தலைவர் அல்லாமல் பிரிதொரு அலுவலர் கையொப்பமிடும்பட்சத்தில் அனுப்புநர் எனும் பகுதியில், அனுப்புநரது பெயரின்றி, அலுவலகத்தலைவரது பதவி குறித்த விவரம் மட்டுமே குறிப்பிடுதல் வேண்டும்.

கடித எண்ணுக்கு முன்பாக நடப்பு கடிதம் என்றும், அடுத்து இருக்கை விவரம், கோப்பு எண் மற்றும் கோப்பு எந்த ஆண்டினைச் சார்ந்தது என்றும் குறிப்பிடுதல் வேண்டும்.

கோப்பு முடிவுற்றதெனில், நடப்பு கடிதம் என்பதற்கு பதிலாக, முடிவின் தன்மை (ஒ.மு/மூ.மு./ப.மு/நி.மு)–யினை குறிப்பிடுதல் வேண்டும்.

உதாரணம்:

ந.க.(அ.5)/27053/2017–12, நாள்: / /2019
மூ.மு.(அ–5)/16758/2015, நாள்: / /2019



Scanned with CamScanner

## கடிதம்–1

அனுப்புநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
...............................மாவட்டம்

பெறுநர்

வருவாய் கோட்டாட்சியர்
...............................உட்கோட்டம்

ந.க.எண்.: இ–3/ /2017, நாள்: / /2019
விகாரி ஆண்டு, ஆவணித் திங்கள் ............ ஆம் நாள்

அய்யா,

பொருள் : நிலம்............................... மாவட்டம் ......................... உட்கோட்டம்.............................கிராமம்...................– புலஎண்: .............................................விஸ்தீரணம்– திரு. ............................ பட்டா வழங்கக் கோரியது – குறித்து.

பார்வை : திரு. .......................... கடிதம் நாள்: / /2019

*******

பார்வையில் காணும் கடிதத்தின் நகல் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப் படுகிறது. திரு.................................. என்பவரது கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தக்க பதிலினை தனியருக்கு 30 தினங்களுக்குள் நேரடியாக தெரிவித்து, அவ்விவரத்தினை இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

மாவட்ட ஆட்சியருக்காக

இணைப்பு : ஒன்று
நகல் : திரு.
(முகவரி)



Scanned with CamScanner

## கடிதம்-2

அனுப்புநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
.......................... மாவட்டம்

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
.......................... மாவட்டம்

ந.க.எண்.: க-3/ /2015, நாள்: / /2019
விகாரி ஆண்டு, ஆவணித் திங்கள் ............. -ஆம் நாள்

அம்மையீர்,

பொருள் : வசூல் – வருவாய் வசூல் – தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை - நீதிமன்ற உத்தரவு - வசூல் மேற்கொள்ளாதது – குறித்து.

பார்வை : 1. இவ்வலுவலகக் கடிதங்கள் எண்.க-2/ /2015 நாள்: 23-12-2015 மற்றும் நினைவூட்டுகள்

2. எனது முன்னவரது நேர்முகக் கடிதங்கள் எண்: க-2/ 2015 / நாள்: 18-04-2016. 26-06-2107. 06-07-2018 மற்றும் 07-07-2019.

3. தங்கள் அலுவலக கடிதம் எண் எ5/ /2015. 06-05-2016 மற்றும் பல

4. திரு.எம்.சுந்தரேஷ், ஈரோடு கடிதம் நாள்: -07-2019

*******

பார்வை ஒன்று முதல் மூன்று முடிய குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்கள் மற்றும் நேர்முகக் கடிதங்கள் ஆகியவைகள் மீது தங்களது உடனடி கவனம் வேண்டப்படுகிறது. இப்பொருள் தொடர்பாக தொழிலாளர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை ரூ. ................................/-னை. பாக்கிதாரர் நிறுவனம்,..............................-இடமிருந்து வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

2. நீதிமன்ற ஆணையின்படி மேற்படி தொகையினை வசூல் செய்து அளிக்கக் கோரி பார்வை நான்கில் காணும் கடிதம் வாயிலாக கேட்டுக்



Scanned with CamScanner

# கடிதம்–2

அனுப்புநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
............................ மாவட்டம்

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
............................ மாவட்டம்

ந.க.எண்.: க–3/ /2015, நாள்: / /2019
விகாரி ஆண்டு, ஆவணித் திங்கள் ................ –ஆம் நாள்

அம்மையீர்,

பொருள் : வசூல் – வருவாய் வசூல் – தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை – நீதிமன்ற உத்தரவு – வசூல் மேற்கொள்ளாதது – குறித்து.

பார்வை : 1. இவ்வலுவலகக் கடிதங்கள் எண்.க–2/ /2015 நாள்: 23–12–2015 மற்றும் நினைவூட்டுகள்

2. எனது முன்னவரது நேர்முகக் கடிதங்கள் எண்: க–2/ 2015 / நாள்: 18–04–2016. 26–06–2107. 06–07–2018 மற்றும் 07–07–2019.

3. தங்கள் அலுவலக கடிதம் எண் எ5/ /2015, 06–05–2016 மற்றும் பல

4. திரு.எம்.சுந்தரேஷ், ஈரோடு கடிதம் நாள்: –07–2019

*******

பார்வை ஒன்று முதல் மூன்று முடிய குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்கள் மற்றும் நேர்முகக் கடிதங்கள் ஆகியவைகள் மீது தங்களது உடனடி கவனம் வேண்டப்படுகிறது. இப்பொருள் தொடர்பாக தொழிலாளர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை ரூ. ................................/–னை. பாக்கிதாரர் நிறுவனம்,............................–இடமிருந்து வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

2. நீதிமன்ற ஆணையின்படி மேற்படி தொகையினை வசூல் செய்து அளிக்கக் கோரி பார்வை நான்கில் காணும் கடிதம் வாயிலாக கேட்டுக்



Scanned with CamScanner

கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இம்மாத இறுதிக்குள் வசூல் செய்து அளிக்கப்படாவிடில், செயலாக்க மனுவினை தனியர் தாக்கல் செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நேர்வில் தனிக்கவனம் செலுத்தி, பாக்கித் தொகையினை வருவாய் வசூல் சட்டப்பிரிவின் கீழ் உடன் வசூல் செய்து, தனியருக்கு வசூல் செய்யப்பட்ட தொகையினை அளித்து அதற்கான ஒப்புகையினை பெற்று 15 தினங்களுக்குள் இந்நேர்வில் அறிக்கை அனுப்பிட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

மாவட்ட ஆட்சியருக்காக.



Scanned with CamScanner

## கடிதம்–3

அனுப்புநர்

திரு.க.சுந்தரமூர்த்தி பி.ஏ.,
வருவாய் வட்டாட்சியர்
............................ வட்டம்

பெறுநர்

வருவாய் கோட்டாட்சியர்,
........................ உட்கோட்டம்

ந.க.எண்.: அ5/ /2018–3, நாள்: / /2019
விகாரி ஆண்டு, ஆவணித் திங்கள் ....................–ஆம் நாள்

அய்யா,

பொருள் : பணியமைப்பு – ................................. மாவட்டம் – உட்கோட்டம் – ................................ வட்டம் – கிராமம் ........................ (திரு). ................................. கிராம நிர்வாக அலுவலர் – பணிக்கு வராமல் தன்னிச்சையாக விடுப்பு துய்த்தல் – மாற்று அலுவலர் நியமனம் – கோருதல்.

*******

இவ்வட்ட எல்லைக்குட்பட்ட ................................ கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவரும் திரு................................ என்பவர், அவ்வப்போது தன்னிச்சையாக பணிக்கு வருகை புரியாமல் இருந்துள்ளார். மேலும், தனியர் இம்மாதம் முதல் தேதியிலிருந்து எவ்வித தகவலுமின்றி பணிக்கு வருகைபுரியாமல் உள்ளார். இவரது மேற்படி செய்கையினால் அலுவலக பணியில் பெரிதும் குந்தகமாகவும், பொதுமக்களுக்கு இடராகவும் உள்ளது. எனவே, மேற்படி தனியருக்கு பதிலாக மாற்று நபரை உடனடியாக நியமனம் மேற்கொள்ள கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தனியருக்கு மாற்று பணியிடம் வழங்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

வட்டாட்சியர்.

நகல்
மாவட்ட வருவாய் அலுவலர்,
............................ மாவட்டம்– தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.



Scanned with CamScanner

# 10 நேர்முகக் கடிதம்

அலுவலகத் தலைவர்கள், இரண்டாம் நிலை அலுவலர்கள் ஆகியோர்கள் நேரடியாக விளித்து எழுதப்படும் கடிதமாகும்.

கடிதத்தின் துவக்கத்தின் இடதுபுறத்தில், நேர்முகக் கடிதம் எழுதும் அலுவலரது பெயர், வகிக்கும் பதவி மற்றும் வலதுபுறத்தில் அலுவலக விவரம், தொலைபேசி எண், மின்அஞ்சல் விவரங்களை குறிப்பிடுதல் வேண்டும்.

**கடிதம்–1**

................................ (பெயர்)
மாவட்ட ஆட்சித் தலைவர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
................................ மாவட்டம்,
தொலைபேசி எண்.:
மின்னஞ்சல் முகவரி:

நே.மு.க. எண் எம்2/    /2019 நாள்:   /    /2019

எனதன்பார்ந்த திரு. ராமமூர்த்தி,

பொருள்: மக்கள் தொடர்பு திட்டம்................................ மாவட்டம் .................... உட்கோட்டம்................................ வட்டம் – ...................... கிராமத்தில் நடத்தப்பட்டது பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை விவரம் – கோருதல்.

பார்வை : 1. இவ்வலுவலக கடிதம் எண் எம்2/    /2019 நாள்: .04.2019 மற்றும் பல.

2. தங்களது கடித எண் ஆ2/ /2019, நாள்:  04/2019

3. தங்கள் முன்னவர் நேர்முகக் கடிதம் எண் ஆ–2/    /2019 நாள்: 28–05–2019

*******

பார்வையில் காணும் கடிதங்கள் மீது தங்களது உடனடி கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. வட்டம், ........................ கிராமத்தில் கடந்த 03–04–2019 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் குறித்த பட்டியலினை அனுப்பி வைக்கக் கோரி பல



Scanned with CamScanner

கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டும், தங்களிடமிருந்து முடிவான பதில் பெறப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இப்பொருள் தொடர்பான விரிவான அறிக்கையினை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதில் காலதாமதமாகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

3. எனவே, இந்நேர்வில் தாங்கள் நேரடி தனி கவனம் செலுத்தி, உரிய படிவ அறிக்கையினை வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெற்று தங்களது குறிப்புரையுடன் இம்மாத இறுதிக்குள் இவ்வலுவலகத்திற்கு தனிநபர் மூலமாக சேர்ப்பிக்க அறிவுறுத்துகின்றேன். இந்நேர்வில் மேலும் காலதாமதம் கூடாது என்பதை கண்டிப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,

பெறுநர்
திரு.................................. (பெயர்)
வருவாய் கோட்டாட்சியர்
...................... உட்கோட்டம்

நகல் :
வருவாய் வட்டாட்சியர்
............................. வட்டம்
– உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.



Scanned with CamScanner

## கடிதம்–2

................................ (பெயர்)
வட்ட வழங்கல் அலுவலர்

வட்டாட்சியர் அலுவலகம்,
........................ வட்டம்
தொலைபேசி எண்.:
மின்னஞ்சல் முகவரி:

நே.மு.க. எண் ச2/ /2019, நாள்: / /2019

அன்பார்ந்த திரு. சுரேஷ்,

பொருள் : உணவு பொருட்கள் வழங்கல் –............... வட்டம்– .............................. கிராமம் – நியாய விலை கடை எண்............................ – அரிசி பதுக்கல் மற்றும் வெளிச்சந்தையில் விற்பனை – நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

பார்வை :
1. இவ்வலுவலகக் கடிதம் எண் ச–2/ /19. நாள்: .2.19
2. தங்கள் கடிதம் எண் ப–1/ /18. நாள்: 03–19
3. எனது நேர்முகக் கடிதம் எண் ச–2/ /19, நாள்:24–04–19
4. தங்கள் கடிதம் எண் ப–1/ /18, நாள்: 06–05–19 மற்றும் 28–07–2019
5. இவ்வலுவலகக் கடிதம் எண் ப–1/ /19, நாள்: 06–08–19

*******

பார்வையில் காணும் கடிதங்கள் மீது தங்களது கவனத்தினை கொணர வேண்டுகிறேன்.

2. இவ்வட்ட எல்லைக்குட்பட்ட நியாய விலைக்கடையினைச் சார்ந்த அரிசி, தங்கள் வட்ட எல்லைக்குட்பட்ட வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக பெறப்பட்ட புகார் தொடர்பாக கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்து, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை தெரிவிக்கக் கேட்டு பல கடிதங்கள் அனுப்பி வைத்தும், தங்களிடமிருந்து பதில் ஏதும் வரப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொருள் குறித்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அவர்களுக்கு அறிக்கை அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதால்,



Scanned with CamScanner

இவ்வினத்தில் மேலும் சுணக்கம் ஏதுமின்றி தங்களது விரிவான அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறேன். இது மிக அவசரமாகும்.

தங்கள் உண்மையுள்ள

பெறுநர்:
திரு............................... (பெயர்)
வட்ட வழங்கல் அலுவலர், ............................ வட்டம்



Scanned with CamScanner

## கடிதம்–3

.............................. (பெயர்)
வருவாய் கோட்டாட்சியர்

வருவாய் கோட்டாட்சியர்
.......................... அலுவலகம்

நே.மு.க. ந.க.எண்.: ஐ2/ /2017, நாள்: / /2019

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள் : இயற்கை இடர்பாடு............................. மாவட்டம் ............................ உட்கோட்டம் – வறட்சி – வறட்சி நிவாரணம் – வழங்கப்பட்டது – தொடர்பாக.

பார்வை : 1. இவ்வலுவலகக் கடிதம் எண் ஐ–2/ /2017, நாள்:18–02–2018
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கடிதம் எண் NC-1/ / 2017 நாள்: 12–12–2019
3. எனது முன்னவர் நேர்முகக் கடிதம் எண் ஐ–2/ /2017. நாள்: 24–01–2019

*******

பார்வையில் காணும் கடிதங்கள் மீது மேலான கவனம் கொணர விழைகிறேன்.

2. இப்பொருள் தொடர்பாக இவ்வலுவலக எல்லைக்குட்பட்ட வட்டங்களிலான வறட்சி பாதிப்பு காரணமாக அளிக்கப்பட்ட நிவாரணத் தொகை விவரங்கள் குறித்த பட்டியல்களை வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து பெற்று விரைவில் அனுப்பி வைக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

பெறுநர்
திரு........................... இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், ........................ மாவட்டம்



Scanned with CamScanner

## 11. செயல்முறைகள்

அலுவலகத் தலைவர், குறிப்பாக பிறப்பிக்கப்படும் ஆணையே செயல்முறைகள் ஆகும். உதாரணமாக விடுப்பு ஒப்பளிப்பு, ஊதிய நிர்ணயம், அரசு அலுவலர்களது விண்ணப்பத்தின் பேரில் கடன்கள் மற்றும் முன்பணம் வழங்கல், விடுப்பு கால பயணச் சலுகை, ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு போன்றவைகளுக்கானவையாகும்.

ஆ/ /2019 நாள்: / /2019

வருவாய் கோட்டாட்சியர்
.................... அலுவலகம்

வருவாய் கோட்டாட்சித் தலைவர் அவர்களது செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு ................................

பொருள் : பணியமைப்பு – அலுவலகம்–.......................(திருமதி)–........................ 18–08–2019 அன்றைய தேதியில் 30/15 நாட்கள் ஈட்டிய விடுப்பு – ஒப்புவிப்பு அனுமதித்து ஆணையிடல்.

படிக்க : 1. அரசாணை எண் 1089 ப(ம)நிசீதுறை நாள்: 01–11–1980
2. அரசாணை எண் 19 ப(ம)நிசீதுறை நாள்: 23–02–2006
3. திருமதி............................. விண்ணப்பம் நாள்: 20–07–2019

*******

ஆணை:

மேலே ஒன்றில் / இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையினைத் தொடர்ந்து, திருமதி..............................., அளித்துள்ள மேலே மூன்றில் காணும் கடிதத்தின்படி 18–08–2019 அன்றைய நிலையில் அவரது ஈட்டிய விடுப்புக் கணக்கிலிருந்து 30/15 நாட்கள் விடுப்பில் செல்லாமலேயே அரசுக்கு ஒப்புவிப்பு செய்து பணப்பயன் பெற அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

இவ்வொப்புவிப்பு குறித்த பதிவுகள் அலுவலரது பணிப்பதிவேட்டிலும், விடுப்பு கணக்கிலும் மேற்கொள்ளப்பட்டது என்றும், சென்ற ஒப்புவிப்பிற்கும், தற்போதைய ஒப்புவிப்பிற்கும் இரண்டாண்டு/ ஓராண்டு இடைவெளி உள்ளது என்றும் சான்றளிக்கப்படுகிறது.

அலுவலகத் தலைவர் /
அதிகாரம் பெற்ற அலுவலர்

பெறுநர் : திருமதி.............................. (வகிக்கும் பதவி விவரம்)
நகல் : சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூலம்



Scanned with CamScanner

## 12. அலுவலக ஆணை

ஒவ்வொரு அரசு அலுவலகங்களிலும், அலுவலக அமைப்பு, அறைகள் மற்றும் அறைகலன்கள் ஒதுக்கீடு, சார்நிலை அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் எழுத்தர் ஆகியோர்களுக்கு பணிகள் குறித்த ஒதுக்கீடு மற்றும் இதர ஆணைகள் குறித்து பிறப்பிக்கப்படும் ஆணைகள் ஆகும்.

பகுதி–1 மற்றும் பகுதி–2 ஆகியவைகள் வாயிலாக பிறப்பிக்கப்படும் அலுவலக ஆணை நிரந்தரமானதாகும். மேலும் பகுதி–3 மற்றும் பகுதி–4 ஆகியவைகள் வாயிலாக பிறப்பிக்கப்படும் அலுவலக ஆணை நடப்பு காலத்திற்கானதாகும்.

அ.ஆ.எண்.: /2019 (பகுதி–1,2,3,4) ...................... அலுவலகம்

நி.மு/மூ.மு. (அ4)/ /2019 காஞ்சிபுரம்

நாள்: / /2019

### அலுவலக ஆணை

பொருள் : பணியமைப்பு–.......................... அலுவலகம், காஞ்சிபுரம்– அறைகலன் ஒதுக்கீடு / பொருள்கள் பிரிவு வாரியாக ஒதுக்கீடு / பதிவேடுகள் சமர்ப்பித்தல் – கால நிர்ணயம் செய்தல்–பொறுப்பு அலுவலர் நியமனம் – ஆணை பிறப்பித்தல்.

பார்வை :

*******

இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்களுக்கு பின்வருமாறு அறை/அறைகலன் ஒதுக்கீடு மேற்கொண்டு ஆணையிடப்படுகிறது.

1. அறை எண்.1
2. அறை எண்.2

இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்களில், தன்பதிவேடு மற்றும் இதரப் பதிவேடுகள் பராமரித்து வருபவர்கள், அப்பதிவேடுகளை பிரதி மாதம் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்ட நாட்களில், குறிப்பிடப்பட்ட அலுவலர்களுக்கு ஆய்வு மேற்கொள்ள ஏதுவாக சமர்ப்பிக்க ஆணையிடப்படுகிறது.



Scanned with CamScanner

| வ.எண். | இருக்கை விவரம் | கண்காணிப்பாளர் | அலுவலக மேலாளர் | அலுவலகத் தலைவர் |
|---|---|---|---|---|
| | | நாள்: | | |
| 1. | அ1 | | | |
| 2. | அ2 | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

இவ்வாணை உடனடியாக அமலுக்கு வருகிறது.

அலுவலகத் தலைவர்

பெறுநர்
அனைத்து அலுவலர்கள்

நகல் :
அலுவலக ஆணை புத்தகம்,
இருப்புக் கோப்பு
அலுவலகத் தலைவர் / மேலாளர் மேசைக்கு

உதிரி



Scanned with CamScanner

# 13. கூட்டக் குறிப்பு

அலுவலகத்தில் அலுவலகத் தலைவர் அல்லது அலுவலக தலைவருக்கு அடுத்த நிலையில் உள்ள அலுவலர்கள் நடத்தும் கூட்டம் தொடர்பாக, கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து பதிவு செய்யப்படுவது கூட்டக் குறிப்பாகும்.

கு1/ /2019

................................ அலுவலகம்
சேலம்
நாள்: / /2019

பொருள் : பணியமைப்பு – ................. அலுவலகம் – ................. மாதம் – அலுவலர்களது களப்பணி ஆய்வு – தொடர்பாக.

பார்வை : களப்பணியாளர்களது ................ மாதத்திய நாட்குறிப்பு

********

................................ மாவட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று ( . .2019) நடத்தப்பட்ட வருவாய் ஆய்வாளர்களது ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களது பெயர்கள் பிற்சேர்க்கை –1–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பங்குகொண்ட அனைவரையும், அலுவலக மேலாளர் வரவேற்றார்.

முன்அனுமதி பெறாமல் இக்கூட்டத்திற்கு வருகைபுரியாத வருவாய் ஆய்வாளர்களது விளக்கத்தினை பெற அலுவலக மேலாளருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அறிவுரை வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும், மேற்கொண்ட பணிவிவரங்கள் குறித்தும் ஆய்வினை மேற்கொண்டார்கள்.

ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:–

1.
2.
3.



Scanned with CamScanner

கூட்டத்தின் இறுதியாக, அலுவலக மேலாளர், மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய அறிவுரைகளின்படி அனைத்து வருவாய் ஆய்வாளர்களும் பணிபுரிய கேட்டுக் கொண்டு, ஆய்வுக் கூட்டத்திற்கு பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவிக்க ஆய்வுக் கூட்டம் முடிவுற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர்

பெறுநர் : அனைத்து வருவாய் ஆய்வாளர்கள்
வருவாய் வட்டாட்சியர் மூலமாக

நகல் :
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது
நேர்முக எழுத்தர்

உதிரி



Scanned with CamScanner

# 14. ஆய்வுரை

அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்களது / களப்பணியாளர்களது பணி, அவர்கள் சமர்ப்பித்த நாட்குறிப்பு அல்லது அறிக்கை / ஆவணங்களை ஆய்வு செய்து மேற்கொள்ளப்படுவதாகும்.

ஆ4/ /2019

......................... அலுவலகம்
சென்னை
நாள்: / /2019

<u>ஆய்வுரை</u>

பொருள் : பணியமைப்பு – அலுவலகம் – .................................. மாதம் .................................. அலுவலர்களது காலதாமத வருகை – ஆய்வு – தண்ட இழப்பீடு செய்து ஆணையிடல்.

பார்வை : .................................................. மாதத்திய வருகைப்பதிவேடு, காலதாமத வருகைப் பதிவேடு மற்றும் தற்செயல் விடுப்பு விண்ணப்ப பதிவேடு

*********

இவ்வலுகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்களில்,............ மாதத்தில், அரசு வேலைநாட்களில் முன் அனுமதி மற்றும் முன் அனுமதியின்றி காலதாமதமாக வருகைபுரிந்த நாட்கள் குறித்து வருகைப் பதிவேடு, காலதாமத வருகைப் பதிவேடு மற்றும் அலுவலர்கள் அளித்துள்ள விண்ணப்பங்கள் ஆகியவைகள் ஆய்வு செய்யப்பட்டன. அரசு அலுவலக நடைமுறை நூலின்படி, அலுவலர்கள் அனுமதிக்கப்பட்ட நாட்களுக்கு மிகையாக முன் அனுமதியுடன் மற்றும் முன்அனுமதியின்றி அலுவலகத்திற்கு காலதாமதமாக வருகைபுரிந்த காலத்திற்கு, அலுவலர்களது இருப்பில் உள்ள தற்செயல் / ஈடு செய் / ஈட்டிய விடுப்பு அல்லது எதிர்வரும் காலத்தில் ஈட்டக்கூடிய ஈட்டிய விடுப்பு ஆகியவைகளில் தண்ட இழப்பீடு செய்து கீழ்வருமாறு ஆணயிடப்படுகிறது.



Scanned with CamScanner

| வ. எண். | அலுவலர் பெயர் மற்றும் வகிக்கும் பதவி | முன் அனுமதியுடன் காலதாமத வருகை நாட்கள் | தண்ட இழப்பீடு (மூன்று நாட்களுக்கு 1/2 நாள்) | முன் அனுமதியின்றி காலதாமத வருகை நாட்கள் | தண்ட இழப்பீடு (மூன்று நாட்களுக்கு ஒரு நாள்) | மொத்த தண்ட இழப்பீடு (ஈ.வி./ ஈ.செ.வி./ ஈ.வி.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| | | | | | | |

